சென்னை—கல்பாக்கம் பேரூந்துப்பணி

* 632 வினு திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து கல்பாக்கத்திற்கு நேரடி பேரூந்து விடும் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராம்ச்சந்திரன் : பல்லவன் போக்குவரத்துக் கழகம் கீழே குறிப்பிட்டுள்ள வழித்தடங்களில் வெவ்வேறு மார்க்கமாக சென்னையிலிருந்து கல்பாக்கம் நகரியத்திற்கு பேரூந்துகளை செலுத்தி வருகிறது.

(1)வழித்தடம் எண் 108 பிராட்வே (சென்னை)—கல்பாக்கம் நகரியம் (எட்டு பேரூந்துகள்) வழி வெலிங்டன், சைதாப்பேட்டை, கிண்டி, தாம்பரம், செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் மற்றும் சதுரங்கப்பட்டணம்.

(2) வழித்தடம் எண் 119 பிராட்வேயிலிருந்து (சென்னை) கல்பாக்கம் நகரியத்திற்கு (மூன்று பேரூந்துகள்) வழி சைதாப்பேட்டை, அடையார், கேளம்பாக்கம், திருப்போரூர், மகாபலிபுரம் மற்றும் சதுரங்கப்பட்டணம்.

(3) வழித்தடம் எண் 119எ பிராட்வேயிலிருந்து (சென்னை) கல்பாக்கம் நகரியத்திற்கு (மூன்று பேரூந்துகள்) வழி சைதாப்பேட்டை, திருவான்மியூர், முட்டுக்காடு, கோவளம், மகாபலிபுரம் மற்றும் சதுரங்கப் பட்டணம்.

பழனி கோயில்

*633 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா:

பழனி தண்டபாணிசுவாமிக்கு வைர கிரீடம் சாத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பழனி அருள்திரு தண்ட பாணி சுவாமிக்கு வைர கிரீடம் சாத்தும் திட்டம் அறங்காவலர் பரிசீலனை யில் உள்ளது.

திரு பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அந்த வைர கிரீடத்திற்கு கோயில் நிதியிலிருந்து செலவிட ஆலோசிக்கப்பட்டுள்ளதா? அல்லது பொதுமக்களிடமிருந்து வசூலிக்கிற நிதியிலிருந்து செலவிட ஆலோசிக்கப்பட்டுள்ளதா ?

1975 எப்ரல் 10]

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, வைரக் கிரீடம் சாத்தும் திட்டமும் அதைப் போன்று தங்கத்தேர், வெள்ளித் தேர் போன்ற திட்டமும் கோயில் நிதியிலிருந்து செய்யாமல் இந்தக் காரியங்கள் எல்லாம் பொதுமக்கள் தருகின்ற நிதியிலிருந்து சென்ற ஆண்டிலிருந்து செய்வது என்று தீர்மானித்து அதன்படி செய்யப்பட்டு வருகிறது.

திரு ஆர். பொன்னப்ப நாடார்: சார், இந்தத்திட்டமானது பரிசீலனையில இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு நாளாகப் பரிசீலனையில் இருக்கிறது? விரைவிலே முடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, கடந்த 25—4—1974 ஆம் தேதியன்று அறங்காவலர் குழு கூட்டத்திலே இந்தத் தீர்மானத்தைப் போட்டார்கள். இதைச் செய்வதற்குப் பல்வேறு சிற்பிகளிடத்திலே தொடர்புகொள்ளப்பட்டது. ஆனால் மிகவும் சிறந்த முறையிலே செய்யவேண்டுமென்ற காரணத்தால் இது சம்பந்தமாக வேறு பல ஸ்தபதியார்களை அணுகி கேட்கப்பட்டுள்ளது. அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே.டி.கே. தங்கமணி : சாதாரணமாக பழனி கோயிலிலே அருமையான நகைகள் இருக்கின்றன, அதையெல்லாம் மக்களுக்கு எடுத்துக் காட்டலாம், அம்மாதிரியாக இருக்கும்போது வைரகிரீடம் அவசியம் தானா? வைரகிரீடம் வேண்டுமென்று நம் அரசிடம் கேட்கப்பட்டதா? அப்படிக் கேட்கப்பட்டு ஏற்கனவே இருக்கிற நகைகளை மக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டுமென்ற முறையிலே ஆலோசனை அவர்களுக்கு சொல்லப் பட்டதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்த வைரகிரீடம், தங்கத் தேர் செய்ய வேண்டுமென்ற நோக்கம் அரசாங்கத்திற்குக் கிடையாது. ஆனால் அந்தந்தக் கோயிலினுடைய அறங்காவலர் குழுக்கள் ஆங்காங்கு பக்தர்கள் தெரிவிக்கின்ற விருப்பத்திற்கிணங்கிச் செய்கிறார்கள். தற்போது நாடு இருக்கிற சூழ்நிலையில் அவசியந்தானா என்பதை அறங்காவலர் எண்ணிப்பார்க்கவேண்டுமென்பதுதான் அரசினுடைய கொள்கையாகும்.

திருச்செந்தூர் கோயில்.

*634—வினா திரு. எம். முத்தையா: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி ஆலயத்தின் வெள்ளி ரதம், தங்க ரதம் ஆகியவை செய்வதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?